# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,568 — 1965 නොවැම්බර් 25 වැනි බ්‍රහස්පතින්දා — 1965.11.25

14,568 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

## உள்ளூராட்சி அறிவிப்புகள்

எல். டி.-ஓ 33/65.

### 1965 இன் 15 ம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

1 ம் பிரிவின் கீழான கட்டளை

1965 இன் 15 ம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 1 ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான் 1965 டிசம்பர் ஆறும் நாளை, மேற்சொல்லப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியாக, இக்கட்டளை மூலம் நியமிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஞு நவெம்பர் மீ 24 ந் உ.

11-1239/1

---

எல். டி.-பீ 28/65.

### 1963 ம் ஆண்டின் 9 ம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

பிரிவு 1 (3) ன் கீழான கட்டளை

1963 ம் ஆண்டின் 9 ம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 1 (3) ஆல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு உள்ளூராட்சியமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான் 1965 ம் ஆண்டு ஆறும் நாளை, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 9ம் பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக இக்கட்டளை மூலம் நியமிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சியமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஞு நவெம்பர் மீ 24 ந் உ.

11-1239/2

---

எல். டி.-பீ 28/65.

### உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

பிரிவு 39அ (4) இன் கீழான கட்டளை

1963ம் ஆண்டின் 9 ம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 39அ என்னும் பிரிவின் (4) ம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரதேசங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு வட்டாரத்துக்கும் மேற்சொல்லப்பட்ட 39அ என்னும் பிரிவின் (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகள் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறும் நாளிலிருந்து ஏற்புடையனவாகும் என இக் கட்டளை மூலம் வெளிப்படுத்துகிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஞு நவெம்பர் மீ 24 ந் உ.

அட்டவணை

மாநகர சபை ஒவ்வொன்றும்.
நகர சபை தாபிக்கப்பட்டுள்ள பட்டினம் ஒவ்வொன்றும்.
பட்டின சபை தாபிக்கப்பட்டுள்ள பட்டினம் ஒவ்வொன்றும்.

11-1239/3


இலங்கை வாணிமைச்சேவை சவ்ரோண பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.